JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.368/2012 Date:18.04.2022 P.W. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரோஹினி ராஜா |
| தந்தை பெயர், க/பெ | : | |
| முகவரி | : | |
| கிராமம் | : | |
| மாவட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1983 of the 18th day of April 2022.

(நீதிமன்ற குறிப்பு - சாட்சி தனக்கு ஆங்கிலம் மட்டுமே நன்கு பேச வரும் தமிழ் தெரியாது என்று கூறிய காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரால் சாட்சியிடம் ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்கப்பட்டு அவர் ஆங்கிலத்தில் கூறியதை மொழி பெயர்த்து தமிழில் சாட்சியம் பதியப்படுகிறது)

**முதல் விசாரணை** - ரூ. 6,657 ஆனது Officer commanding Head Quarter company CRPF Group Center Avadi என்பதிலிருந்து பெற்றார். இந்த பணம் தலைமை காவலர் ராஜேந்திரகுமார் என்பவரின் சம்பளம் ஆகும். இதனை காசாலர் வேலை பார்த்த சீனிவாசன் 04.09.2008ம் தேதி மேற்கண்ட அலுவலகத்திலிருந்து எதிரி பெற்றுக் கொண்டு அன்றைய தினம் Group center ல் பெற்றுக் கொண்டு தலைமை காவலர் ராஜேந்திரகுமார் அன்று அங்கு இல்லாததால் அவரது மேற்கண்ட பணத்தை அவர் பணி மாறுதல் பெற்று சென்ற இடத்திற்கு செலுத்தாமல் இருந்ததால் எதிரி மேற்படி பணத்தை ADIGP Group center அனுப்பி வைக்க வேண்டும். அவர்கள் அந்த பணத்தை மீண்டும் தலைமை காவலர் ராஜேந்திரகுமார் அவர்களுக்கு கொடுப்பார்கள். 05.01.2008ம் தேதி காசாலர் சீனிவாசன் மேற்கண்ட ரூ. 6,657 யை அரசாங்க வங்கி கணக்கில் செலுத்திவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். ரூ.604 மற்றும் ரூ.6,657 ஆக மொத்தம் ரூ. 7,261 யை அரசாங்க வங்கி கணக்கில். செலுத்திவிட்டதாக எஸ்பிஐ வங்கி எச்விஎப் ஆவடி கிளையில செலுத்திவிட்டதாக கவுண்ட்டர் பாயில் தயாரித்து அவரது கையெழுத்திலேயே மேற்கண்ட பணம் வங்கியில் செலுத்தியதாக குறிப்பிட்டுள்ளார். அந்த கவுண்ட்டர் பாயிலை எதிரி அவருடன் வைத்தியிருந்தார். 10.09.2008 தேதி ரூ. 32,200 யைய் டாக்டர் ஜெயபாலன் சிஎம்ஓ காம்புரசிங் மருத்துவமனை என்பவர் திரு. பாஸ்கரன் ASI பார்மசிஸ்ட் என்பவரிடமிருந்து அவருக்கு அதிதிதமாக வழங்கப்பட்ட அரியர் பணத்தை பெற்று அரசாங்க கருவூலத்தில் செலுத்துவதற்காக எதிரி சீனிவாசன் என்பவருக்கு கவரிங் லெட்டர் ADIGP க்கு மேற்கண்ட பணத்தை அனுப்பினார். மேலும் அப்பணத்தை அரசாங்க கருவூலத்தில் வரவு வைப்பதற்காக அனுப்பினார். இந்த பணமானது கேஸ் செக்ஷனுக்கு செல்லும். எதிரி சீனிவாசன் இந்த பணத்தை பெற்றுக் கொண்டு அந்த கடிதத்தில் கையொப்பம் இட்டுள்ளார். மேற்கண்ட பணம் கவர்மெண்ட் கேஸ்புக் குருப் சென்டர் சிஆர்பிஎப் ஆவடி பேஜ் நம்பர் 44லில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பணமும் கவுர்மெண்ட்டில் வரவு வைக்கப்பட்டுவிட்டதாக எதிரி சீனிவாசன் அவருடைய கையெழுத்தில் எஸ்பிஐ ஆவடி வங்கி கணக்கு எண் 30050482219 டெப்பாசிஸ்ட் செய்தது போல் கவுண்ட்டர் பாயில் தயாரித்து அவர் வசம் வைக்கப்பட்டுயிருந்தார் மேலும் அந்த கவுண்ட்டர் பாயில் 100 பக்கங்களை தொடர் எண்கள் கொண்ட

புத்தகம் ஆகும். வரிசையாக சீரியல் நம்பர் கொடுக்கப்பட்டுயிருக்கும். மேற்படி எதிரி சீனிவாசனிடமிருந்து எஸ்.ஐ.எம்.ஜீ.வீரமணி என்பவர் பணி பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் ஆவணங்களை பரிசீலத்தி பார்த்தபோது மேற்படி பணம் ரூ. 7,261 மற்றும் ரூ. 32,200 வங்கி கண்க்கில் செலுத்தப்படாதது தெரியவந்தது. மேற்கண்ட பணங்கள் செலுத்தப்பட்டதற்கான கவுண்ட்டர் பையிலில் கேஸ்சியர் சீனிவாசன் தன் கைப்பட எழுதி கவுண்ட்டர் ப்பாயில் வைத்துள்ளார், ஆனால் மேற்கண்ட பணங்கள் முறையாக வரவு வைக்கப்படவில்லை. மேலும் அந்த கவுண்ட்டர் ப்பாயில் களில் அவரின் கையெழுத்துயிட்டு வங்கி சீல் வைத்துள்ளார். மேற்கண்ட பணம் வரவு வைக்கப்பட்டதா என்று வங்கி அதிகாரிக்கு கடிதம் மூலம் அந்த காலகட்டத்தில் அக்கவுண்ட் ஆபிசிராக பணி புரிந்த அசா .1 கே. மனோகரன் டிபியுட்டி கமாண்ட்டர் குருப் சென்டர் சிஆர்பிஎப் என்பவர் மூலம் மேனேஜர் எஸ்பிஐ எச்விஎப் ஆவடியில் கேட்டார். ரூ. 7,261 மற்றும் ரூ 32,200 ஆகியவற்றை வங்கி கணக்கில் செலுத்தப்படவில்லை என்றும் அதனால் வரவு வைக்கப்படவில்லை என்று தெரிவித்தனர். இதனால் எதிரி ஆவணங்களுடன் வைத்தியிருந்த கவுண்ட்டர் பாயில் ஆனது எதிரியால் போலியாக தயாரித்து ஆவணங்களுடன் வைக்கப்பட்ட விவரம் தெரியவந்தது. அந்த கவுண்ட்டர் பாயில்களானது அக்கவுண்ட் நம்பர் சீல் மற்றும் டேட் சீல் போடப்பட்டுயிருக்கும். இந்த இரண்டு சீல்களும் எதிரி சீனிவாசன் என்பவரிடம் ஆவணங்களுடன் வைக்கப்பட்டுயிருந்தது. பொதுவாக வங்கியில் பணம் செலுத்தப்படுவதாக இருந்தால் என்சிஓ ரிஜிஸ்ட்டரில் அதற்காக நியமிக்கப்பட்ட என்சிஓ தலைமை காவல் ஜி.டி ஜெ. மனோகரன் என்பவரால் அந்த ரிஜிஸ்ட்டரில் பதிவு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட இரு தொகைகளும் பேங்க் டியுட்டி என்சிஓ ரிஜிஸ்ட்டரில் பதிவு செய்யப்படவில்லை. மேற்கண்ட தொகைகளை பொதுவாக என்சிஓ பேங்க் டியுட்டி காவலர் மூலம் செலுத்துவது வழக்கம். ஆனால் மேற்கண்ட தொகைகளானது சீனிவாசன் நேரிடியாகவே வங்கி கணக்கில் செலுத்திவிட்டதாக கவுண்ட்டர் பாயில் ஆவணங்களுடன் வைக்கப்பட்டுயிருந்தது. மேற்கண்ட பணம் வங்கியில் செலுத்தப்படாதது குறித்து கேஸ்சியர் சீனிவாசன் என்பவரிடம் அசா.1 கேட்ட போது பணம் செலுத்தப்பட்டுவிட்டதற்கான கவுண்ட்டர் பாயில் மற்றும் சீல்கள் ஆவணங்களுடன் வைக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து வங்கியை மேலும் விவரங்கள் தெரிந்து கொள்ள கேட்டுக் கொள்ளுமாறு தெரிவித்தார். வங்கி மேற்கண்ட பணம் செலுத்தப்படவில்லை என்று அசா.1 யிடம் தெரிவிக்கப்பட்டுள்ளன. (அசா.1 ன் ஏற்கனவே சாட்சி அளித்துள்ளதால் இந்த வழக்கு சம்மந்தமான அசா.3 என்ன செய்துள்ளார் என்று கேட்டபோது அவர் தனது முதல் விசாரணையில் ஏற்கனவே எந்த காலகட்டத்தில் என்ன பணிகள் வகித்தார் என்று தெரிவித்துள்ளார். ஆவணங்களின் அடிப்படையிலும் அசா.1 விசாரணையின் அடிப்படையிலும் மேற்படி விவரங்கள் தனக்கு தெரியவந்ததாக குறிப்பிட்டார்) மேற்படி குற்ற சம்பவமானது தான் அந்த பதவியில் பொறுப்பில் இருக்கும் போது போலியான ஆவணங்களின் அடிப்படையில் நடந்துள்ளதாக திரு. வீரமணி பதவி பொறுப்பு ஏற்றதற்கு பிறகு தெரியவந்தது.

( அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- Fanny Rajan,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur